தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை- 6

தி

ந.க.எண்: 000987/எம்1/இ1/2026 நாள்: 2.08.2026

பொருள்: பள்ளிக்கல்வி – பள்ளிகளில் புகையிலை மற்றும் போதைப்பொருள் இல்லாத பாதுகாப்பான கல்விச் சூழலை உருவாக்குதல் – நஷா முக்த் வித்யாலயா (Nasha Mukt Vidyalaya) மூன்றாண்டு செயல் திட்டம் (2026–2029) – அனைத்து பள்ளிகளும் Nasha Mukt Vidyalaya இணையதளத்தில் பதிவு செய்து சுயமதிப்பீடு மேற்கொள்ளுதல் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளை செயல்படுத்துதல் – அறிவுரை வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1. இந்திய அரசின் பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, கல்வி அமைச்சகச் செயலாளர் அவர்களின் கடிதம் எண்.28-1/2026-PACE. நாள்: 20.07.2026.
2. அரசு இணைச்செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 கடித எண்: 5892/GL1(2)/2026-1. நாள்:18.08.2026

*****

பார்வையில் 1இல் காணும் கடிதத்தில், பள்ளி மாணவர்களிடையே புகையிலை, போதைப்பொருள் மற்றும் பிற போதைத் தன்மையுடைய பொருட்களின் பயன்பாட்டைத் தடுக்கும் நோக்கத்துடன், பள்ளிகளில் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருள் இல்லாத கல்விச் சூழலை உருவாக்குவதற்காக "நஷா முக்த் வித்யாலயா (Nasha Mukt Vidyalaya)" மூன்றாண்டு செயல் திட்டம் (2026–2029) செயல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இச்செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக, அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் https://tofei.education.gov.in என்ற Nasha Mukt Vidyalaya இணையதளத்தில் பதிவு செய்து, பள்ளிகளில் புகையிலை மற்றும் போதைப்பொருள் இல்லாத சூழல் நிலவுவதை உறுதி செய்யும் வகையில் இணையவழி சுயமதிப்பீட்டை மேற்கொண்டு, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தங்களை "நஷா முக்த் வித்யாலயா" என சுயஅறிவிப்பு செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளுக்கு கீழ்க்காணும் அறிவுரைகளை உரிய முறையில் வழங்கி, அவற்றை தவறாது செயல்படுத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. அனைத்து பள்ளிகளும் https://tofei.education.gov.in என்ற Nasha Mukt Vidyalaya இணையதளத்தில் உடனடியாக பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
2. ஒவ்வொரு பள்ளியும் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள சுயமதிப்பீட்டு செயல்முறையை முழுமையாக நிறைவு செய்து, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களுக்கு இணங்க புகையிலை மற்றும் போதைப்பொருள் இல்லாத

பள்ளிச் சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3. பள்ளிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்காக, போதைப்பொருள் மற்றும் புகையிலைப் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஆலோசனை, வாழ்க்கைத்திறன் கல்வி மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. பள்ளி வளாகத்தைச் சுற்றியுள்ள 500 மீட்டர் சுற்றளவை "போதைப்பொருள் இல்லாப் பகுதி (Drug-Free Zone)" என அறிவிக்கும் வகையில் தேவையான அறிவிப்புப் பலகைகள் நிறுவப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
5. கல்வி அமைச்சகம் நடத்தும் MyGov இணையவழி வினாடி-வினா போட்டியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.
(https://quiz.mygov.in/quiz/quiz-on-international-day-against-drug-abuse-and-illicit-trafficking/)-
6. பள்ளிகளின் போதைப் பொருள் எதிர்ப்பு செயல்பாடுகள் சார்ந்த நடவடிக்கைகளை அவ்வப் பொழுது கண்காணித்து செயல்பாடுகளில் பின்தங்கியுள்ள பள்ளிகளுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கிடவும் தெரிவிக்கலாகிறது.

இச்சுற்றறிக்கை, அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களின் கவனத்திற்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவரின் செயல்முறைகள்
ஓ.மு.எண்.4439/ஆ5/2026 நாள். 08.09.2026

(நகல்)– தக்க நடவடிக்கைக்காக அனைத்து வகை பள்ளிகளுக்கு அனுப்பலாகிறது.

முதனமைக் கல்வி அலுவலர்
வேலூர்-632 009

பெறுநர்

அனைத்து வகை பள்ளித் தலைமையாசியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம். (உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)